**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 115/2013**

இந்நீதிமன்றத்து பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு ஜுலை மாதம் 22** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 22.07.2025**

**பெயர் – வாசு (எ) வாசுதேவன்**

**த/பெ – வேனுகோபால்**

**சாட்சி – DW1**

**விசாரணை தொடங்கும் நேரம்– 2.40 பி.எம்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

1. எனது பிரமான வாக்குமூலத்தில் பத்தி 11 ல் பி.சா.ஆ 1 ல் ரட்சகதாஸ் என்பவருக்கு சொந்தமான மனை எண் 125/5, 134/4 சமரசமாக பேசி தீர்த்துக்கொண்டார்கள் என்றால் பத்தி 11 ல் அதுபோன்று எதுவும் இல்லை. பி.சா.ஆ 1 ஆவணம் போலியானது என்றால் சரியல்ல. வழக்கு தொடர்பாக நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது, அந்த மனுவானது **வா.சா.ஆ 15** ஆக வாதி தரப்பில் குறியீடு செய்யப்படுகிறது. இந்த நீதிப்பேராணை மனுவானது ஸ்ரீனிவாச நகரில் வசிக்கும் 18 நபர்களுக்கு பட்டா வழங்க கோரி உத்தரவானது என்றால் சரியல்ல. நீதிப்போராணை மனு உத்தரவு ஆன தேதி 05.10.2012 என்றால் தெரியவல்லை.
2. பி.சா.ஆ 1 மற்றும் 2 உத்தரவு ஆகிய பின்பு தான் இந்த நீதிப்பேராணை மனுவானது உத்தரவானது என்றால் தெரியாது. இந்த நீதிப்பேராணை மனுவானது உத்தரவான பின்பு 3 ம் வாதி நிர்மலா பெயரில் பட்டா (வா.சா.ஆ 12) வழங்கப்பட்டது என்றால் தெரியாது. பி.சா.ஆ 1 மற்றும் 2 மற்ற மனைதாரர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாவா சொத்து உள்ள இடத்தில் சாலை வசதி, வீட்டு வரி ரசீது, மின் இணைப்பு வாதிகள் பெயரில் பட்டா உள்ளதால் தாசில்தார் மற்றும் பி.டி.ஓவை வழக்கின் தரப்பினார்களாக சேர்க்க கோரி இடைக்கால மனு எண் 4/2024 தாக்கல் செய்யப்பட்டு அந்த மனுவானது தேவைப்பட்டால் அழைப்பாணை கொடுத்து அவர்களை விசாரணை செய்யலாம் என்று உத்தரவிடப்பட்டது என்றால் அது குறித்து தெரியவில்லை.
3. இவ்வழக்கில் போட்ட உத்திரவினைப் பற்றி தெரியாத காரணத்தினால் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வாதிகள் மீது புகார் கொடுத்து அதற்கான சி.எஸ்.ஆர்–ஐ பெற்றதுமாக குறிப்பிட்டுள்ளேன் அவ்வாறு இருப்பின் அதற்கான ஆவணத்ததை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வாதிகள் கொடுத்த புகாரின் பெயரில் என்னை அழைத்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.

4. தாவா சொத்தை சுற்றி கண்டெய்னர் லாரி ஷெட் உள்ளது என்றால் எதிரில், பக்கத்தில் இல்லை தொலைவில் தான் உள்ளது. தாவா சொத்து கோடி கணக்கு மதிப்பு உள்ளது என்றால் தாவா சொத்தானது மதிப்புடைய சொத்து தான். இந்த சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்பதை காட்ட நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் நகல் தாக்கல் செய்யப்பட்டது, அதை நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் தாவா சொத்தினை சட்ட விரேதாமாக அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. 2004 ல் தாவா சொத்தில் வில்லங்கம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன், அந்த விவரத்தினை நான் கூறிதான் இரண்டு மற்றும் 3ம் பிரதிவாதிகளுக்கு தெரியும் என்றால் எனது தந்தை மற்றும் பெரியப்பா கூறிய பிறகு தான் எனக்கு தெரியும்.

4. 1984 ல் பதிவு செய்த ஆவணங்களில் 2004 ல் வில்லங்கம் இருப்பதாக தெரிய வந்த பின்பு திருவொற்றியூர் சார்பதிவாளரிடம் ஏதேனும் மனு கொடுத்துள்ளேனா என்றால் அது குறித்து தெரியவல்லை. தாவா சொத்தில் வில்லங்கம் ஏதும் இல்லை, எனக்கு அரசியல் செல்வாக்கு உள்ளதால் ரவுடிகள் மற்றும் காவல்துறையினரை வைத்து தாவா சொத்தினை அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவம் பற்றி எதுவும் படிக்காமல் மெடிக்கல்ஸ் நடத்தி வருவதாலும் தாவா சொத்திற்கு சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததாலும் நான் சட்ட விரோதமான செயலில் ஈடுபடுகிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் சார்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் செல்லாது என்றும் இந்நீதிமன்ற உத்தரவு ஏதேனும் பெற்றுள்ளேனா என்றால் இந்த வழக்கு தொடுப்பதற்கான காரணமே அது தான். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ15 மூலமாக வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 3.25 பி.எம்.**